தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண்.005/ந/2021

ஆணை நாள். 19 .03.2021

திரு. வி. அன்பழகன்,
பூந்தமல்லி, சென்னை. – முறையீட்டு மனுதாரர்.

திரு. ப.மு.நெ. முஜிபுர் ரகுமான்,
முன்னாள் மாநகராட்சி ஆணையாளர், ஆவடி.
திரு. சீனிவாசன்,
முன்னாள் மாநகராட்சி பொறியாளர், ஆவடி. – எதிர்மனுதாரர்கள்.
சென்பகவல்லி
முன்னாள் மாநகராட்சி இளநிலை பொறியாளர்.
ஆவடி மாநகராட்சி.

பெருநகர சென்னை மாநகராட்சி, எண்.13/9, மல்லியம் நரசிம்மன் நகர், பூந்தமல்லி என்ற முகவரியில் வசிக்கும் திரு. வி.அன்பழகன் அவர்களின் 28.02.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 02.05.2020 அன்று பெறப்பட்டு 005/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை.**

பெருநகர சென்னை மாநகராட்சி எண். 13/9, மல்லியம் நரசிம்மன் நகர், பூந்தமல்லி என்ற முகவரியில் வசிக்கும் திரு வி. அன்பழகன் என்பவர், ஆவடி நகராட்சி/ஆவடி மாநகராட்சி 2017–2018–ல் தேசிய நகர்புற சுகாதார இயக்கம் நிதியில் சோழம்பேடு ஆரம்ப சுகாதார மைய கட்டிட பணியில் எம். புத்தகத்தில் போலியாக அளவுகள் பதிவு செய்து, நகராட்சிக்கு ரூ.87019/– இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் நகராட்சிக்கு இழப்பு என்பதைவிட ஒப்பந்ததாரர் செல்வகுமார் பெயரில் போலியாக போட்ட பில் தொகை ரூ.87019/– ஐ நகராட்சி பொறியாளர் சீனிவாசன், நகராட்சி ஆணையர் முஜிபுர் ரஹ்மான், இளநிலை பொறியாளர் செண்பகவள்ளி உள்ளிட்டவர்கள் கமிசனாக பெற்றுள்ளார்கள் எனவும், தேசிய நகர்புற சுகாதார இயக்கத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கோரப்பட்ட டெண்டரில் ஆர்.

செல்வக்குமார் என்ற ஒப்பந்தக்காரரிடம் பணி ஒப்படைக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டு கீழ்க்கண்ட குற்றச்சாட்டுக்களையும் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்:-

( I ) Supplying fabrication and placing in position msor RTS rods reinforcement grill for RCC work as per the decision giving invluding cost of steel and binding wire extra complete as per standard specification – இந்த பணியில் எம்.புத்தகம் பக்கம் –2ல் 10 மில்லிமீட்டர் இரும்பு கம்பி 5544.24 கிலோ பயன்படுத்தப்பட்டதாக உள்ளது. எம்.புத்தகம் (அளவு புத்தகம்) பக்கம் எண்.9–ல் பதிவு செய்துள்ளவாறு பயன்படுத்திய அளவாக தீர்வு செய்துள்ள 10 மிமி இரும்பு கம்பியின் அளவு 6446.70 கிலோ. வேறுபாடு 902.46 கிலோ. அளவு புத்தகத்தில் போலியாக அதிகப்படியாக இரும்பு கம்பி பயன்படுத்திய 902.46 கிலோவுக்கு ஒரு கிலோ. 10 மி.மீ. இரும்பு கம்பியின் விலை ரூ.61.45 என கணக்கிட்டால் 902.46 கிலோவுக்கு ரூ.55,456,16 அல்லது ரூ.55,457 நகராட்சிக்கு இழப்பு.

( ii ) Reinforcement cement concrete 1:1. :50: 3 using 20mm gauge hard granite broken stone jelly for all reinforced cement concrete இந்த பணியில் அளவு புத்தகம் பக்கம் எண்.7–ல் ஆர்.சி.சி அளவு 40.52 கன மீட்டர் (24.3.2017 ) என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அளவு புத்தகம் பக்கம் எண்.10–ல் (15.05.17) ஆர்.சி.சி. அளவாக தீர்வு செய்துள்ள அளவு 45.53 கன மீட்டர் – வேறுபாடு 5.01 கனமீட்டர். ஆர்.சி.சி. அளவிற்கான தொகை ஒரு கன மீட்டருக்கு ரூ.6299.80 என கணக்கிட்டால் 5.01 கன மீட்டருக்கு ரூ.31,562 நகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆகமொத்தம் ரூ.87,019 ஐ பொறுப்பானவர்களிடமிருந்து வசூலித்து நகராட்சி நிதியில் சேர்க்கப்பட வேண்டும் என்று உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை பொறுப்பானவர்களிடமிருந்து வசூலிக்கவில்லை. ஒப்பந்ததாரர் செல்வக்குமாரை பிளாக் பட்டியலிலும் வைக்கவில்லை. எனவே ஆவடி நகராட்சி ஆணையராக இருந்த முஜிபுர் ரஹ்மான் மற்றும் பொறியாளர் சீனிவாசன், இளநிலை பொறியாளர் செண்பகவல்லி ஆகியோர் மீது உரிய விசாரணை நடத்தி, நடவடிக்கைகள் எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2) திரு முஜிபுர்ரஹ்மான், முன்னாள் ஆணையர், ஆவடி பெருநகராட்சி (தற்போது செங்கல்பட்டு மண்டல நகராட்சி இயக்குநர் ) சீனிவாசன், பொறியாளர், முன்னாள் பொறியாளர், ஆவடி நகராட்சி ,(தற்போது வேலூர் மாநகராட்சி பொறியாளர்) செண்பகவல்லி, இளநிலை பொறியாளர், முன்னாள் ஆவடி பெருநகராட்சி (தற்போது மறைமலை நகர் நகராட்சி இளநிலை பொறியாளர் ) மற்றும் மனுதாரர் திரு. வி. அன்பழகன் ஆகியோரிடம் 22.02.2021 அன்று இம்முறை மன்றத்தில் நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தமது வாக்குமூலத்தில், " நான் இன்று (22.02.2021) மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி, நான் ஏற்கனவே முறைமன்ற நடுவத்தில் கொடுத்த என்னுடைய புகார் மனுவையே வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன் " என்று தெரிவித்துள்ளார்.

3) ஆவடி முன்னாள் நகராட்சி ஆணையாளர், நெ.முஜிபுர்ரஹ்மான் (தற்போது நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு), ஆவடி நகராட்சி பொறியாளர் வெ.ஸ்ரீனிவாசன் (தற்போது வேலூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர்) மற்றும் ஆவடி நகராட்சி இளநிலை பொறியாளர் செண்பகவள்ளி (தற்போது மறைமலைநகர் நகராட்சி இளநிலை பொறியாளர்) ஆகியோர் கூட்டாக அளித்த வாக்குமூலத்தில் திரு. வி.அன்பழகன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில், நகராட்சிப் பணிகளில் இழப்பு என உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையில்

அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே, இதன் மீது நடவடிக்கை எடுத்திடவும் அளித்துள்ள முறையீட்டு மனு தொடர்பாக 22.02.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி முறையீட்டு மனு தொடர்பாக முழு அறிக்கையினை நேரடியாக சமர்ப்பிக்கின்றோம் என்று தெரிவித்தனர். மேலும் மனுதாரர் அளித்துள்ள புகாரில் கண்ட இழப்புத் தொகை ரூ.87019 தணிக்கையில் சுட்டிக்காட்டியபடி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.ஆர். செல்வகுமார் என்பவரிடமிருந்து அவரது வைப்புத்தொகை கணக்கிலிருந்து ஈடு செய்யப்பட்டு நகராட்சிக் கணக்கில் வரவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஒப்பந்ததாரர்களுக்கு கூடுதலாக வழங்கப்பட்ட தொகையை நகராட்சி கணக்கில் ஈடு கட்டப்பட்டுவிட்டமையால் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் இத்தணிக்கைத் தடை. 18.12.2018 அன்று திருவள்ளூர் நகராட்சியில் உள்ளாட்சித் தணிக்கைத் துறையின் இணை இயக்குநர் தலைமையில் நடைபெற்ற தணிக்கை கூட்ட அமர்வில் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளனர். இந்நேர்வு தொடர்பான நீண்ட விளக்க அறிக்கையினையும் சமர்ப்பித்தனர்.

4) அவ்வறிக்கையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆவடி பெருநகராட்சியில் 2017–2018 ஆம் ஆண்டில் வார்டு எண்.10–ல் சோழம்பேட்டில் ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் அளவுப் புத்தகத்தின்படி இரும்பு கம்பி பயன்படுத்தியதில் வேலை செய்த அளவிற்கும், பட்டியல் தீர்வு செய்த அளவிற்கும் உள்ள வித்தியாசமான பயன்பாடு 902.46 கிலோ 10 mm இரும்பு கம்பிக்கான கிரையத் தொகை ரூ.55457/– மற்றும் RCC அளவு இதே போன்று வேலை செய்த அளவிற்கும் பட்டியல் தீர்வு செய்த அளவிற்கும் உள்ள வித்தியாசமான பயன்பாடு 5.01 கன மீட்டர் (ரூ.31562/–) ஆக மொத்தம் ரூ.87019/– இழப்பு ஏற்பட்டுள்ளது என 2017–2018 உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கை பத்தி எண்.30–ல் குறிப்பிடுவதாகும். நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பொறியியல் சார்ந்த பணிகளை செயல்படுத்தவும், கண்காணிக்கவும் இதற்கென தொழில் நுட்ப தகுதி பெற்ற பொறியாளர்கள் நகராட்சியில் பணிபுரிகின்றனர். இப்பொறியாளர்களே பொறியியல் சார்ந்த கட்டுமான பணிகளின் அளவுகளை அளவுப் புத்தகத்தில் இளநிலைப் பொறியாளர் / உதவி பொறியாளரால் அளவீடுகள் பதிவு செய்யப்பட்டு நகராட்சி உதவி செயற்பொறியாளரால் சரிபார்க்கப்பட்டு மேல் அளவு ஒப்புதல் செய்யப்பட்டு பணப்பட்டுவாடாவிற்காக நகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது. அளவுப் புத்தகங்களில் பொறியியல் பணியாளர்களால் அளவீடுகள் பதிவு செய்வது, மேல் அளவுகள் ஒப்புதல் செய்வது குறித்து விரிவான அறிவுரைகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் வெளியிடப்பட்ட நகராட்சிப் பொறியாளர்கள் கையேட்டில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நேர்வில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடப்பணியில் சம்மந்தப்பட்ட உதவி பொறியாளரால் மேல் அளவு ஒப்புதல் செய்யப்பட்டு பணப்பட்டுவாடாவிற்காக ஆணையருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்நேர்வில் கோப்புகளின்படி அளவீடுகள் தவறுதலாக கணக்கிடப்பட்டுள்ளன. இதற்குண்டான இழப்புத் தொகை ரூ.87019/– என கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்பட்ட இழப்புத் தொகை ரூ.87019/– தணிக்கையில் சுட்டிக்காட்டியபடி சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு. ஆர்.செல்வகுமார் என்பவரிடமிருந்து அவரது வைப்புத்தொகை கணக்கிலிருந்து ஈடு செய்யப்பட்டு நகராட்சி கணக்கில் வரவழைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒப்பந்ததாரர்களுக்கு கூடுதலாக வழங்கப்பட்ட தொகை ரூ.87019/– ம் நகராட்சி கணக்கில் ஈடு கட்டப்பட்டுவிட்டமையால் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையினரால். இத்தணிக்கைத் தடை 18.12.2018 அன்று திருவள்ளூர் நகராட்சியில் நடைபெற்ற தணிக்கை கூட்டமர்வில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

5) இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்களின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

ஆவடி நகராட்சியில் நகர்புற சுகாதார இயக்கம் நிதியில் 2017–2018ன் கீழ் வார்டு எண்.10–ல் உள்ள சோழம்பேடு நகராட்சி பள்ளி அருகில் ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் அமைக்க மதிப்பீடு ரூ.45,00,000/–க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி திரு. ஆர்.செல்வகுமார் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டது என அறியப்படுகிறது.

மேற்படி பணி முடிக்கப்பட்டு கட்டிடம் அமைக்கப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி பணியின் போது உபயோகப்படு.த்ப்பட்ட இரும்பு கம்பிக்கும், கான்கிரீட்டுக்கும் அளவு புத்தகத்தில் பதியப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டது. இதில் அளவு புத்தகத்தில் இருந்து பில் பட்டியல் (Abstract ) –க்கு எடுத்து எழுதும் போது இரும்பு கம்பிக்கு 5544.24 கிலோவிற்கு பதிலாக 6446.70 கிலோவாகவும், கான்கிரீட் RCC பணிக்கு 40.52 M பதில் 45.53 M ஆக பதியப்பட்டுள்ளதும் இதன்படி ஒப்பந்ததாருக்கு ரூ.87019/– ஐ பில் பட்டியல் தொகைக்கும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. இப்பொருள் குறித்து ஆவடி நகராட்சியில் நடைபெற்ற தணிக்கையில், பத்தி எண்.30–ல் குறிப்பிட்டிருந்தனர். இதனை தொடர்ந்து தணிக்கைத்தடை கூட்டமர்வு திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் 18.12.2018 அன்று நடைபெற்றது. இக்கூட்டமர்வில் ஒப்பந்ததாரர் திரு ஆர்.செல்வகுமார் அவர்களிடமிருந்து வைப்பு தொகை (Deposit) தொகையில் ரூ.87019/– யினை பிடித்தம் செய்து நகராட்சியில் வரவாக்கப்பட்டு, தணிக்கை தடையும் மூன்று மாதத்திற்குள் நீக்கம் செய்யப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. இந்நிலையில், முன்னாள் ஆணையாளரும் தற்போதைய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிக்கையை ஏற்று, இம்முறையீட்டு மனுவின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு மார்ச்சு, திங்கள், 19 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
22-3-21

22/3/21

பெறுநர்

1) திரு வி. அன்பழகன்,
13/9, மல்லியம் நரசிம்மன் நகர்,
பூவிருந்தவல்லி,
சென்னை - 600 056.
2) திரு. ப.மு.நெ.முஜீபுர் ரஹ்மான்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
3) திரு. ஸ்ரீனிவாசன்,
உதவி செயற்பொறியாளர்,
வேலூர் மாநகராட்சி.
வேலூர்.

4) செண்பகவல்லி,
மறைமலை நகர் நகராட்சி இளநிலை பொறியாளர்,
மறைமலைநகர்.
செங்கல்பட்டு மாவட்டம்.

நகல். முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.

இகோ/உதிரிகள்.